யோகாஸன ஆலய விஜயம்

மலர் 31	காளயுக்தி ஆண்டு புரட்டாசித் திங்கள் September—1978	இதழ் 9

கணக்கறிந் தார்க்கன்றிக் காணவொண் ணாது
கணக்கறிந் தார்க்கன்றிக் கைகூடா காட்சி
கணக்கறிந் துண்மையைக் கண்டண்ட நிற்குங்
கணக்கறிந் தார்கல்வி கற்றறிந் தாரே.

பதி பசு பாசம் எனும் மூப்பொருள் இலக்கணத்தை அறிந்து, பதியாகிய இறைவன் புரியும் ஐந்தொழில்களை விளக்கும் 'சிவயநம' எனும் திருவைந்தெழுத்தின் உண்மையை குருவாயிலாகத் தெளிந்து கணிப்பவரே இறைவனைக் காண்பர். தெளியாதார் காணவொண்ணு. உண்மையைத் தெளிந்து கண்டவரே கற்றறிந்தார் எனவும், சிவஞானச் செல்வர் எனவும் போற்றப்படுவர்.

—திருமூலர்.

சந்தா விபரம்	உள்நாடு	சிலோன்	வெளிநாடு (கப்பல்)	விமானம்
ஆண்டு சந்தா	ரூ. 4—00	ரூ. 6—00	ரூ. 15—00	ரூ. 30—00
ஆயுள் சந்தா	ரூ. 50—00	ரூ. 80—00	ரூ. 150—00	ரூ. 300—00
தனிப்பிரதி	40 காசு	50 காசு	ரூ. 1—25	ரூ. 2—00

திருமணம்

யோகாசனலய அங்கத்தினர் விருதுநகர் திரு. V. V. V. ராஜேந்திரன் அவர்களின் மகன் திருவளர் செல்வன் முத்துவுக்கும், திருவாளர் Dr S. காசிராஜன் அவர்கள் மகள் திருவளர் செல்வி மலர்விழிக்கும், விருதுநகர் அன்பு இல்லத்தில் 21—8—78 அன்று திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. யோகாசன ஆலய தலைமை செயற்குழு உறுப்பினர் திருவாளர் A. S. ஆதிநாராயணன் அவர்களும், விருதுநகர் அன்பர்களும் மண விழாவில் கலந்துகொண்டு பிரார்த்தனைப் படம் அன்பளிப்பாக வழங்கி வாழ்த்தினர். மணமக்கள் சார்பாக 'யோகாசன விஜயம்' வளர்ச்சி நிதிக்காக ரூ. 100 (நூறு) வழங்கப்பட்டது.

திருமதி K. T. பாக்கியலட்சுமி தங்கமுத்து நாடார் குமாரன் யோகாசன ஆலய அங்கத்தினர் திருநிறைச் செல்வன் ஜூலியஸ் ஸீஸருக்கும் சென்னை உயர்திரு S ஆறுமுகசாமி நாடார் குமாரத்தி திருநிறை செல்வி விஜயாவுக்கும் 27—8—78 அன்று சென்னை இராயபுரம் இராஜரத்தின நாயகர் திருமண மண்டபத்தில் திருமணம் விமரிசையாக நடைபெற்றது. யோகாசன ஆலய அன்பர்கள் மணமக்களுக்கு வாழ்த்து மடல் வாசித்தளித்து வாழ்த்தினர்.

யோகாசன ஆலய அங்கத்தினர் திருமதி சின்னத்தாயம்மாள் தங்கப்ப நாடார் குமாரன் திருவளர் செல்வன் ஜெயபாலன் B.A.-க்கும் திருவளர் செல்வி அனுசூயாதேவிக்கும் 7—9—78 அன்று திருப்பரங்குன்றம் அங்கயற்கண்ணி மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது.

யோகாசன ஆலய மகளிர் பிரிவு மௌன வகுப்புச் செயலர் திருமதி ராஜம்மாள் நாராயண நாடார் மகன் திருநிறைச் செல்வன் N. பாண்டியனுக்கும் திருநிறைச் செல்வி சந்திராவுக்கும் 8—9—78 அன்று விருதுநகர் கூத்தன் கோவில் மணமகள் இல்லத்தில் திருமணம் நிகழ்ந்தது.

ஷ ராஜம்மாள் நாராயண நாடார் பேத்தி திருநிறைச் செல்வி பரிமளாவை, திருநிறைச் செல்வன் R. கதிரேசன் M.Sc., அவர்கள் இல்வாழ்க்கை துணைவியாக ஏற்கும் மணவிழா 15—9—78 அன்று சென்னை வண்ணையம்பதி சோலையப்பன் தெருவிலுள்ள இல்லத்தில் நடைபெற்றது. திருவாளர் அரு. சங்கர் B.Sc., அவர்கள் தலைமை வகித்தனர். யோ. ஆலய அமைப்பாளர் திரு. பி. வெங்கடேசன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினர்.

ஷ 3 திருமணங்களை யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் முன்னின்று நடாத்திவைத்து மணமக்களை வாழ்த்தியருளினர்.

விருதுநகரில் சுவாமிகளின் சிறப்பு நிகழ்ச்சி

10—9—78 ஞாயிறு இரவு 7-30 மணிக்கு விருதை ஸ்ரீ வால சுப்பிரமணிய சுவாமி கோவிலில் விருதை யோகாசன ஆலயத்தினரால் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. உயர்திரு O. M. S. S. S. சுந்தர மகாலிங்க நாடார் அவர்கள் தலைமை வகித்தனர். யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் ''விண்ணிலவு'' எனும் பொருள்பற்றி வேதாந்த விளக்கவுரை நிகழ்த்தினுர்கள். விருதை அன்பர்கள் திரளாக வருகை தந்து கேட்டு மகிழ்ந்தனர் ?.

மகரிஷி தாயுமானவர்

ஆசையெனும்

திரு. கோ. மு. சுவாமி அவர்கள்

நிகழ்த்திய உரை விளக்கம்.

வாழி சோபனம்! வாழிநல் லன்பர்கள்!
சூழ வந்தருள் தோற்றமுஞ் சோபனம்!
ஆழி போலரு ளையன் மவுனத்தால்
ஏழை யேன்பெற்ற இன்பமுஞ் சோபனம்!

பதவுரை

சோபனம் - அடியேன் பாடும் சோபனமானது, வாழி! - வாழ்க!, நல் அன்பர்கள் - நன்மையினையே செய்கின்ற அடியார்கள், வாழி! - வாழ்க!, சூழ - அடியேனைச் சூழுமாறு, வந்து அருள் - வந்து கிருபை புரிந்த, தோற்றமும் திருவருட்டோற்றமும், சோபனம்! - சுகமாகுக!, ஆழிபோல் - கடல்போல, அருள் - அருளினையுடைய, ஐயன் - குருவின், மவுனத்தால் - மௌனோபதேசத்தால், ஏழையேன் - எளியேன், பெற்ற - அடைந்த, இன்பமும் - சுகமும், சோபனம் - சுகமாகுக!, என்க.

கருத்துரை

அடியேன் பாடும் மங்களகரமான வாழ்த்துப் பாடல் வாழ்க! நன்மையே நினைந்து செய்யும் அடியார்கள் வாழ்க! அடியேனைச் சூழ வந்து அருள்புரிந்த திருவருள் தோற்றமும் வாழ்க! கடலைப்போன்ற பரந்த அருளுடைய குருவின் மௌனோபதேசத்தால் எளியேன் அடைந்த இன்பமும் சுகமாகுக! என்க.

விரிவுரை

தாயுமான அடிகளார் முன் பாடலில் தன் குருநாதன் மகிழ்ந்தளித்த உபதேசம் எனும் குருமொழியினை நினைந்து உருகாத தன் நெஞ்சத்தின் வன்மையை எடுத்து மொழிந்தனர். இப் பாடலில், தான்

ஆனந்த மேலீட்டால் பாடிய பாடல்களும், அடியார்களும், தான் பெற்ற அருட் காட்சியும், குருநாதன் அளித்த மௌன உபதேசத்தால் தான் அடைந்த இன்பமும் வாழ்க ! வாழ்க ! என வாழ்த்துகின்றார்.

ஒவ்வொருவரும் அவரவர் பெற்ற நற்பேறுகள் நிலைத்து வாழ வேண்டுமென்றே விரும்புவர். அவ்வண்ணமே தாயுமான அடிகளாரும் தான் பெற்ற உண்மையான சுகம் வாழவேண்டும் எனப் பிரார்த்தனை செய்கின்றார்.

இன்பங்கள் இருவகையுள ; ஒன்று, ஐம்புலன்களினால் நுகரப் படுவது. மற்றொன்று, அறிவால் அறிந்து அனுபவிப்பது. சான்றோர் ஐம்புலன்களினால் நுகரப்படும் இன்பத்தை வேண்டினாரல்லர். அறிவு நிலையில் நின்று அனுபவித்த அற்புதக் காட்சிகள் நிலைபெறவே அருளை வேண்டினர். அதை அருள்பவன் பராபரமாகிய இறைவனேயாதலின் அவனிடமே வேண்டினர். பரம்பொருளை அறிவதன் முன்னம் தம்மைத் தாம் அறிதலே நெறியாதலின் அறிய முற்பட்டனர். இதற்குச் சான்றுகள் தாயுமானவரின் அருள்வாக்குகளினாலேயே காணலாம் :

"தன்னை யறியாது சகந்தானாய் இருந்துவிட்டால்
உன்னை யறியஅருள் உண்டோ பராபரமே"

"தன்னை யறிந்தருளே தாரகமாய் நிற்பதுவே
உன்னை யறிதற் குபாயம் பராபரமே"

"தன்னை யறியத் தலைவன்மேல் பற்றலது
பின்னை யொரு பற்றுமுண்டோ பேசாய் பராபரமே"

"தன்னை யறிந்தவர் தம்மைத் தானாகச் செய்தருளுஞ் சமத்தை" இங்ஙனம் இன்னும் சான்றுகள் பல உள.

மத்தான் சாகிப் எனும் சித்தர்: "என்னை யறிந்தேனே ஏகாந்த மானேனே" என்பார். இங்ஙனம் தன்னையறியத் தலைப்பட்ட ஒவ் வொருவருக்கும் தாரகமாய் இருந்த பொருள் எது ? இதுவே நம் சிந்தனையைத் தூண்டுவதாகும். தாரக மந்திரம் என்பர் சிலர், அதுவே ராம நாமம் என்றும் கூறுவர் ! அவ்வாறெனில், தசரத மைந்தரான இராமர் தாரகமாய்ப் பற்றியது எதனை ? சரயு நதிக் கரையில் தவஞ் செய்தபோது அவர் பற்றிய தாரகம் எது ? குல குருவான வசிஷ்டரிடம் அவர் பெற்ற உபதேசம் யாது ? இவ் வினாக்களுக்குத் தக்க விடை பகர வேண்டுமல்லவா ?

"தந்தை தாயுநீ என்னுயிர்த் துணையுநீ, சஞ்சலமது தீர்க்கவந்த தேசிக வடிவுநீ, உனையல்லால் மற்றொரு துணைகாணேன்" எனவும் "ஆதாரம் ஆதேயம் முழுதும்நீ, ஆதலால் அகிலமீது என்னை ஆட்டி ஆடல் கண்டவனுநீ, அருளுநீ, மவுன ஞான தாதாவுநீ, எனைப்பெற்ற தாய் தந்தை தாமும்நீ, தமரும்நீ. யாவும் நீகாண்" எனவும் மகரிஷி தாயுமானவர் உறுதிப் பொருளாகப் பற்றியமைக்கு ஆதாரமாக இருந், தது, மௌன குருவின் வாயிலாகப் பெற்ற உபதேசம் எனும் மறை பொருளேயாம் ! இவ்வுபதேசம் என்பது, காலம் வரையறுத்துக் கூற வியலாத ஆதிகாலந் தொடங்கி வாழையடி வாழையாக வழிவழிவந்த குருமரபினரால் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றது நிலத்தைப் பண்படுத்திய பின்னரே வித்திடுதல் போல, சித்தவிருத்திகள் எனப் படும் எண்ணக் குவியல்களை அகற்றிய சுத்தமான சித்தத்தில் உபதேசம் எனப்படும் பிரம்ம வித்தைப் பதிக்கின்றனர்.

கடலில் செல்லும் மாலுமிகளுக்கு மலைகளும் திசைகாட்டிக் கருவியும் ஆதாரமாக இருப்பதுபோல தனிப்பெருந் தலைவனும் பரம்பொருளைச் சார்வதற்கு உபதேசப் பொருள் ஆதாரமாகும். அந்த சுகம் பேரின்பச் சுகமாகும். "சோதி மவுனியாய்த் தோன்றி அவன் சொல்லாத வார்த்தையைச் சொன்னாண்டி தோழி" எனவும், "சொன்னதுமோ ஒரு சொல்லே! அந்த சொல்லால் விளைந்த சுகத்தைஎன் சொல்வேன்" எனவும் வியந்து கூறுபவர் தாயுமான அடிகளாரேயாவர். அச் சொல்லே அவர்களுக்கு ஆதாரம்! அதனின்றும் பெறும் சுகத்தைப் பெறவே உலக சுகத்தைத் துறந்தனர் சான்றோர். இந்த சுகம் என்று வரும்? என ஏக்கமுறுகின்றார் அருட்பிரகாச வள்ளலார்,

இன்று வருமோ நாளைக்கே வருமோ அல்லதுமற்
றென்று வருமோ அறியேன் எங்கோவே– துன்றுமல
வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா இருக்கும் சுகம்.

இத்தகைய சுகம்பெற தன்னை யறிந்தபின்னர் தாரகத்தைப் பற்றி நின்று திருவருளை வேண்டினர். இந்த சுகத்தைச் சோபனம் என்றனர் தாயுமானார். அதனை அளித்தவர் மௌன குருவே என அறுதியிட்டு உறுதியாகவும் கூறுகின்றார் ;

மோன குருஅளித்த மோனமே ஆனந்தம்
ஞான அருளும்அது நானும்அது—வானுதி
நின்ற நிலையும்அது நெஞ்சப் பிறப்பும்அது
என்றறிந்தேன் ஆனந்த மே.

துள்ளிக் குதிக்கின்ற பேய்க் குரங்காகிய கள்ள மனம் மாய்ந்து வெட்ட வெளியாகிய நிலையில் இட்ட வித்தினின்றும் தோற்றப்படும சுகம் எதுவோ? அதுவே ஆதாரம். ஒவ்வொரு சாதனைப்படியினின்றும் தோற்றப்படும் பொருள் எதுவோ? அதனையே ஆதாரமாகவும் பற்றினர். மனம் அடங்கப் புலன்கள் அடங்கும். யோகியர் விழிப்பு (சாக்கிர) நிலையிலேயே புலன்கள் ஒடுங்கப்பெற்று உணர்வு (அறிவு) நிலையில் நிலைத்திருப்பர்.

சிலர் காற்றை (மூச்சு) உயிரெனவும், கடவுளெனவும், ஆதாரமெனவும் பகர்கின்றனர். காற்று எங்ஙனம் உயிராகும்? கடவுளாகும்? அவ்வாறெனில், இறந்த பின்னரும் தச வாயுக்களில் ஒன்றான தனஞ்செயன் எனப்படும் காற்று இருந்து உடலைப் பெருகச் செய்கின்றதே! அக் காற்று உயிராகுமா? அன்றிக் கடவுள் தான் ஆகுமா? அக் காற்றே கடவுளானால் அக் காற்றைப் பெற்றிருக்கின்ற நம்மால் ஓர் சிற்றெரும்புக்கு உயிர் கொடுக்க இயலுமா? காற்று பஞ்ச பூதங்களில் ஒன்றல்லவா? "ஐவகை யெனும் பூதமாதியை வகுத்து அதனுள் அசையும் பொருள் அசையாப் பொருள்களைப் படைத்து அறிவையும் படைத்துக் காத்து அழிக்கவும் வல்ல பரம்பொருள் எவ்வாறு பஞ்ச பூதங்களுள் ஒன்றான காற்றாக முடியும்? எனவே அறிவுக்கு அறிவாக நின்றுணர்த்தும் பெரிய பொருளே கடவுள் எனக் கூறத் தக்கதாகும். அவ்வறிவைப் பயன்படுத்துபவரே அறிஞராவார். இக வாழ்க்கையிலும் இவ்வறிவைப் பயன்படுத்துவோரிடத்து துன்பம் நெருங்குவதில்லை. முற்காலத்தில் அரசர்களைக் காட்டிலும் அமைச்சர் பெருமக்கள் மதி

நுட்பம் வாய்ந்தவர்களாகத் திகழ்ந்திருக்கின்றனர். அவர்களுள் கிருஷ்ணதேவராயன் எனும் மன்னனிடத்து அமைச்சராக இருந்த அப்பாஜி என்னும் அமைச்சரின் மதிநுட்பம் காலத்தால் அழிக்க வியலாத காவியமாக அமைந்துள்ளது.

இராமராயர் என்னும் அரசரின் மைந்தனே கிருஷ்ணதேவராயன். இராமராயரின் ஆட்சிக் காலத்தில் அப்பாஜி என்பவர் அமைச்சராகப் பணிபுரிந்து வந்தார். அவரின் அறிவின் திறத்தால் ஆட்சியைச் செம்மையாகவே ஆண்டுவந்தார் இராமராயர். அவர் மரணத்தருவாயில் தன் மைந்தனை சிறுவன் கிருஷ்ணதேவராயனின் கரங்களைப் பிடித்து அமைச்சர் அப்பாஜியின் அன்புப் பிடியில் ஒப்படைத்து கண்ணீரினால் கழுவினர். உன் மகனாகவே கருதி அவனின் தக்க வயதில் ஆட்சி பொறுப்பை அளித்து உடனிருந்து காக்கவேண்டுமென வேண்டுகோள் விடுத்து உயிர் துறந்தார்.

அப்பாஜி கிருஷ்ணதேவராயனின் வளர்ச்சியில் அளவுகடந்த அக்கறை செலுத்தினர். மன்னர் மைந்தனுகையால் அறுபத்திநான்கு கலைகளிலும் தேர்ச்சிபெறச் செய்தார் அரும்பு மலராகி மணம் வீசுவது போல கிருஷ்ணதேவராயன் கட்டிளங் காளைப் பருவம் எய்தினன். ஆட்சிப் பொறுப்பேற்று நடாத்தும் நிலைமைக்கு உருவாக்கியபின் கிருஷ்ணதேவராயனுக்கு முடிசூட்டு விழா நடத்தி அளப்பருங் களிப் பெய்தினர் அமைச்சர் அப்பாஜி. அப்பாஜியின் அறிவாற்றலால் வளர்க்கப்பட்டவனல்லவா தேவராயன்? ஆட்சியில் யாதொரு குறைபாடும் காண இயலவில்லை. ஆனல் கலிங்க மன்னன் ஒருவனே மூன்று ஆண்டுகளாக கப்பம் கட்டவில்லை என்பதை அறிந்த ராயரின் சிந்தனை கலிங்க மன்னன்பால் திரும்பியது. இளையவன் கிருஷ்ணதேவராயன் என எண்ணினனே? என அவன்பால் போர் தொடுக்கத் துணிந்தான். நாலவகைச் சேனைகளும் தொடரப் புறப் பட்டான்.

இரு படைகளும் பலநாள் போரிட்டன. மடிந்தான் கலிங்க மன்னன். கிருஷ்ணதேவராயனல் கலிங்கப் படைகள் சிதறடிக்கப் பட்டன. அரண்மனைக்குள் புகுந்து நவரத்தினங்கள் முதலான விலை மதிக்கவியலாத பொருள்களைக் கைக்கொண்டனர் ராயனின் படைகள். ஆனல் கிருஷ்ணதேவன் பேரழகுச் சிலை ஒன்றைகண்டான்! ஆம் சிலைதான். கலிங்க மன்னன் மகளாகிய சித்திரப் பதுமை! அலைமகள், கலைமகள், மலைமகள் ஆகிய மூவரின் பேரழகும் ஒன்று திரண்டுவந்த உருவம்போல் இருந்தாள். அவளைப் பல்லக்கில் ஏற்றி தன் நாட்டுக்கு அழைத்து வந்து தாயிடம் ஒப்படைத்தான். வீரனின் விவேகம் வேல் விழியாளின் வீச்சில் ஒளி மயங்கிவிட்டது. வளர்ப்புத் தந்தையும் அமைச்சருமான அப்பாஜியிடம் தன் எண்ணத்தை வெளியிட்டான். அப்பாஜி ஆத்திரம அடைந்தார். கிருஷ்ண! வீரத்தின் விளைவிடம் என்றலலவோ உன்னை நினைத்தேன்? பகைவன் மகள் முன்பு கோழையாகி விட்டாயே! என் உடலில் உயிருள்ளவரை இவள் உனக்கு மனைவியாக மாட்டாள் எனக் கடுமையாகவே கூறினர். அமைச்சரே! என்னுடைய எதிர்காலம் பற்றியே எந்நேரமும் சிந்தித்திருக்கும் தங்களின அன்புள்ளம் அறிவேன். ஆயினும இந்த ஒரே விஷயத்தில மட்டும் தாங்கள் என் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்க வேண்டும். அவளின்றி என் வாழ்விலலை என்று ஒரே பிடியாய்ப்

பிடித்துவிட்டான் கிருஷ்ண தேவன். அப்பாஜியின் சொற்கள் பலன் தரவில்லை. இறுதியாக கேட்டார்; கிருஷ்ணு! நான் வேண்டுமா? அவள்தான் வேண்டுமா? அப்பாஜியின் சீடரல்லவா ராயன்? அழகாகச் சொன்னுன் இருவரும் வேண்டும் என.

அப்பாஜி கிருஷ்ண தேவனின் மனத்தை மேலும் துன்புறுத்த விரும்பவில்லை, ஆனுல் ஒரு நிபந்தனை இட்டார். கிருஷ்ணு! உன் விருப்பப்படியே உங்கள் இருவருக்கும் திருமணம் நடைபெறும். ஆனுல்! ...என்று தயங்கினுர். கிருஷ்ண தேவனுக்கு உள்ளமே வெடித்துவிடும்போல இருந்தது அந்த ஆனுல் என்ற சொல். என்ன அப்பாஜி? சீக்கிரம் சொல்லுங்கள்! என விரைவுபடுத்தினுன். உங்களுக்கு சாந்தி மூகூர்த்தம் நடைபெருது! என தழுதழுத்த குரலில் கூறினுர். அப்பாஜியின் வார்த்தை வேடிக்கையாகவும், வேதனையாகவும் இருந்தது கிருஷ்ண தேவனுக்கு!

அப்பாஜி ஈதென்ன விந்தை? உங்களின் போக்கு என்னுல் புரிந்துகொள்ள இயலவில்லையே! விருந்துக்கு அழைத்து அனைத்தும் பரிமாறி கைகளைக் கட்டிவிட்டு உண்ணக்கூடாது என்பது போலன்றே இருக்கிறது தங்களின் வார்த்தை? என்ருன்.

அப்பாஜிக்கு வேதனை ஒரு புறம்? பாசம் மறுபுறம். இறுதியாகக் கூறினுர்; க்ருஷ்ணு! மேலும் என்னை வற்புறுத்தினுல் இந்த விநாடியே எனக்கு இறுதிக்கடன் செய்ய நேரிடும் என்ருர். அப்பாஜியின் வார்த்தைக்கு மறு வார்த்தை கூற முடியாமல் மன்னன் அவர் ஆணைப் படியே நடப்பதாக ஒப்புக்கொண்டான்.

திருமணம் கோலாகலமாக நடைபெற்றது. அன்று முதல் இரவு! கிருஷ்ணு! இன்று நானும் உன்னுடன் இருப்பேன்! என்ருர் அப்பாஜி, மறுவார்த்தை இல்லை; கிருஷ்ணன் தலையசைத்தான். அமைச்சர் அப்பாஜியின் ஆணைப்படி கிருஷ்ணதேவராயனைப்போலவே பதுமை ஒன்று மஞ்சத்தின் பக்கத்தில் நிறுத்திவைக்கப்பட்டது! சிலையின் கழுத்துப் பாகத்தில் தேன் நிறைந்த குடம் பொருத்தப்பட்டது திரை மறைவில் அப்பாஜி கிருஷ்ணனைத் தன் பக்கத்தில் இருத்தி, ஒளிந்திருந்து நிகழவிருக்கும் நிகழ்ச்சியைக் காணுமாறு பணித்தார். மன்னனுக்கு வியப்பும் வேடிக்கையுமாக இருந்தது. ஆனுல் அப்பாஜியின் வார்த்தைக்கு அடிபணிந்தான். கலிங்க மன்னன் மகளாகிய மணமகள் அழகு சிலையாக அறைக்குள் புகுந்து தாளிட்டாள். தன் ஆத்திரமெல்லாம் தீர மறைத்து வைத்திருந்த வாளினுல் ஒரே வீச்சாக பதுமையின் கழுத்தில் வீசினுள். தலை வேறு உடல் வேருயிற்று. சினத்தின் சிகரத்தில் நின்ற அவள் கண்களுக்குப் பதுமை தெரியவில்லை. வாள்பட்ட வேகத்தில் தேன் குடம் உடைந்து சிதறி அவளின் நாவில் தேன் ஊறியது. திகைத்தாள். மன்னரின் உதிரமே இவ்வாறு இனிக்கிறதே! உள்ளம் எத்தகைய இனிமையாக இருக்கும்? ஐயோ ஆத்திரத்தில் அறிவிழந்தேனே! எனக் கதறலானுள்.

கிருஷ்ணதேவனுக்கு அவளின் செய்கை புரியாத புதிராக இருந்தது. அப்பாஜி அவனை ஒன்றும் பேசாதவாறு செய்து வேற்றுவழியாக அழைத்துச் சென்று அவனது ஐயத்தைப் போக்கினுர். கிருஷ்ணு! அவளின் தந்தையைக் கொன்று நாட்டைக் கைப்பற்றினுயல்லவா?

அந்த அளவற்ற வஞ்சத்தைத் தீர்த்துக்கொண்டாள். இப்போது புரிகிறதா? நீ நேரில் இருந்திருப்பாயேயானால் உன் நிலைமை என்னவாகி இருக்கும்? ஆனால் இப்போது மாறிவிட்டாள். தவறென உணர்ந்து கொண்டாள். இனி இவளைப்போன்ற நல்லாள் கிடைப்ப தரிது! என கூறிவிட்டு தான் மட்டும் மறுபுறமாகச் சென்று கதவைத் தட்டினார். கதவைத் திறந்த கலிங்க மன்னன் மகள் அப்பாஜியைக் கண்டதும் ஓ!வெனக் கூக்குரலிட்டுக் கதறினாள். ஐயா! ஆத்திரத்தில் அறிவிழந்தேன். அவரின் உளப் பாங்கை அறியாத அறிவிலியானேன். இனி நான் வாழ்ந்து பயனில்லை. இதோ வாள்! என்னைக் கொல் லுங்கள்! என்றாள்.

அப்பாஜி ஆட்கள் மூலமாக வெட்டுண்ட பதுமையை விரைவாக அப்புறப்படுத்தச் செய்து மணமகளாய் நின்ற கலிங்கன் மகளுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறினார். மகளே! கவலை விடு. இனிச் செய்ய வேண்டியதைச் செய்வோம். அடுத்த மலையடிவாரத்தில் ஞானியொருவர் இருக்கின்றார். அவரிடம் வேண்டி உன் கணவனை உயிர் பெற்று எழுப்பித்தர முயற்சிக்கிறேன் என்று கூறிப் புறப்பட்டார். சற்று நேரத்திற்கெல்லாம் கிருஷ்ணதேவனை உடன் அழைத்துவந்து ஒப்படைத்து வாழ்த்தினார். அவளோ அளவற்ற மகிழ்வெய்தி செய்த பிழை பொறுத்து மன்னித்தருள வேண்டினாள்.

இங்ஙனம் அப்பாஜியின் அறிவுத் திறன் பலவகைகளிலும் பயன் பட்டது கிருஷ்ணதேவனுக்கு. உலக மக்களை வாழ்த்தி உரை நிகழ்த் துவது சித்தாந்த நெறி. சாதனையில் தாம் கண்ட அற்புதக் காட்சிகளை வாழ்த்துவது வேதாந்த நெறி. தாயுமான அடிகளார் இப் பாடலில் "வாழி சோபனம், வாழி நல்லன்பர்கள் சூழ வந்தருள் தோற்றமும் சோபனம்" என அருள்நெறி நின்றவர்களையும், அருள் வழங்கிய குரு நாதனையும், கண்ட காட்சியையும் வாழ்க! வாழ்க! என மனமுவந்து வாழ்த்துகின்றார்.

அடுத்தது "ஆழிபோல் அருள் ஐயன் மவுனத்தால் ஏழையேன் பெற்ற இன்பமும் சோபனம்" என்கின்றார். கடல் பரந்து விரிந்து அளப்பருந் தன்மை உடையதுபோல, தன் குருவானவரின் உள்ளம பரந்த நோக்குடையதாம்! அதனாலன்றோ "சிவாநுபூதி மன்ன ஒரு சொற் கொண்டு எனைத் தடுத்து ஆண்டு அன்பின் வாழ்வித்த ஞான குருவே" எனவும், சின்மயானந்த வெள்ளம் தேக்கித் திளைத்து நான் அதுவாயிருக்கநீ செய்சித்ர மிகநன்றுகாண்! எந்தை வடவாற் பரம குரு வாழ்க! வாழ அருளிய நந்தி மரபு வாழ்க! எனவும் தன் குரு மரபினையே வாழ்த்துகின்றார்.

குருவருளால் பெற்ற ஒப்பற்ற உபதேசப் பொருளை நாளும் வைத்து வைத்துப் பார்ப்பவரைத் தானாக எந்நாளும் வளர்த்துக் காக்கும் என மொழிகின்றார் அடிகளார். கடலுள் வீழ்ந்த கல் லானது கடலின் ஆழத்தைக் காணுமாறு அதனடியிற் சென்று தங்கு வதைப்போலவே; சாதகர் மௌனமெனும் கடலின் அடிப்பாகத்திற்குச் செல்ல வேண்டும். அவ்வனுபவத்தில் கிடைக்குமின்பம் சொல்லுக் கடங்காதது. யோகத்தின் அங்கமாகிய எட்டும், ஆதாரங்கள் ஆறும், அவத்தைகள் ஐந்தும் கடந்த வெளியாந் தன்மையில் பட்டினத்தடிக ளாரின் அனுபவம், நீங்காத பேரின்பம் அவரையே (சீவனை) விழுங்

கியதாம். "அட்டாங்க யோகமும்" என்ற அவரின் பாடல் இதனைப் பறை சாற்றுகின்றது.

"ஒண்கடலில் தேனமுதத்து உணர்வூறி,
இன்பரசத் தேபருகிப் பலகாலும்"

என்பர் அருணகிரியார்.

இவ்வின்பத்தை நுகர்வது தூல உடலா? சூட்சும உடலா? எனில் சூட்சும உடலே யாம். இறுதிக் காலத்தில் உடலைவிட்டு உயிர் பிரியும் போது விடயங்கள் எனும் ஐம்புலன்களும், மனம், புத்தி, சித்தம் மூன்றும் ஆக எட்டும் உடன் செல்கின்றது. அப்போது அதற்கு ஆதார மாக இருப்பது குருமொழியே யாம்.

விழிப்பு நிலையிலேயே நம்மை மறந்து இருந்தால் உறக்கத்தில் நம் நிலை என்னவாகும்? ஆனல் சான்றோர் அவத்தைகள் ஐந்திலும் தன்னிலையிலேயே இருப்பர், காரணம்? தீவிர உழைப்பு! இங்ஙனம் அளப்பரும் உழைப்பால் அன்றி, ஒப்பற்ற பரம்பொருளின் தன்மையை நூல்களில் படித்தோ, பிறர் கூறக்கேட்டோ அறிந்துகொள்ளவியலாது திருப்புகழின் இப்பாடல் இதனை தெள்ளத் தெளிய எடுத்துரைக் கின்றது.

வாசித்துக் காணொ ணாதது
பூசித்துக் கூடொ ணாதது
வாய்விட்டுப் பேசொ ணாதது நெஞ்சினாலே
மாசர்க்குத் தோணொ ணாதது
நேசர்க்குப் பேரொ ணாதது
மாயைக்குச் சூழொ ணாதது விந்து நாத;
ஓசைக்குத் தூர மானது
மாகத்துக் கீற தானது
லோகத்துக் காதி யானது கண்டு நாயேன்
யோகத்தைச் சேருமாறு மெய்ஞ்
ஞானத்தைப் போதி யாயினி
யூனத்தைப் போடி டாதும யங்கலாமோ;
ஆசைப்பட் டேனல் காவல்செய்
வேடிச்சிக் காக மாமய
லாகிப்பொற் பாத மேபணி கந்த வேளே
ஆலித்துச் சேல்கள் பாய்வய
லூரத்திற் காள மோடட
ராரத்தைப் பூண்ம யூரது ரங்க வீரா;
நாசிக்குட் ப்ராண வாயுவை
ரேசித்தெட் டாத யோகிகள்
நாடிற்றுக் காணொ ணாதென நின்ற நாதா;
நாகத்துச் சாகை போயுயர்
மேகத்தைச் சேர்சி ராமலை
நாதர்க்குச் சாமி யேசுரர் தம்பிரானே.

YOGASANAS

Translated version of Mr. E. S. Rangaswami's
A great exponent of Yagasanas
By Sri R. Meharbabu, B.Sc., M.A., B.T.

(Continued from previous issue)

The following asanas are to be done in the prostrate position. Bujangasana, Salabasana, Dhanurasana and Mayurasana. Certain other asanas are to be done in lying position facing sky. They are Patchimothasana, Halasana, Sarvangasana, Machasana and Shavasana. In the standing position we have to do Padahasthasana, Thirikonasana, Udhyana, Nauli, Naulikriya etc. By doing these twenty asanas daily at a particular time the practitioner will be hale and healthy and he will live happily for hundred years without loosing his stamina and getting any diseases Further he deserves to follow the path of spirituality and attain the ultimate biiss of his soul.

Though these asanas are done in the sitting posture, standing posture and lying posture, some of them are very easy to do. Certain other, of course with a little strain to be done. By practice all these asanas could be made easy but they ought to be done one after the other as mentioned below :

1. Padmasana	2. Bujangasana	3. Salabasana
4. Dhanurasana	5. Patchimothasana	6. Halasana
7. Mayurasana	8. Sarvangasana	9. Matchasana
10. Sirasasana	11. Yogamudhra	12. Arthamachendrasana
13, Paththa Padmasana	14. Siddhasana	15. Padha hasthasana
16. Thirikonasana	17, Oortha padmasana	
18. Udyana	19. Nauli	20, Shavasana.

BUJANGASANA

BUJANGASANA :—(Serpant pose) - Hood. Bujangasana means the pose of a serpant with its full spirit and desire to music. Spread a carpet on grouud. Lye down facing the ground Keep

---

இவ்வண்ணம் அரிய பொருளை நாடிச் செல்வோருள் மூவகையினர் உளர் தாயுமான அடிகளார் அருளெனும் கடலுள் ஆழ்ந்து அனுபவம் எனும் முத்துக்கள் கண்டெடுத்து அவ்வின்பத்தின் தன்மையை ஒருவாறு பகர்ந்து அவை வாழ வேண்டும் என்பதை "ஏழையேன் பெற்ற இன்பமும் சோபனம்" என்று முடிக்கின்றார். ஏழையென்பது உலகப் பொருளிலன்று; பரத்துக்கான அருளில் அஃதாவது அறிவில் ஏழை என்பதாம். நாமும் ஏழைகளாயிராமல் திருவருள் பெற்று இன்புற்றிருப்போமாக!

your palms closer to either sides of chest near buckles. Stretch your legs straight by properly seating the knees, ankles and thighs of legs on the carpet shooting the foot up. Try to raise head and see the sky up as far as possible, by raising chest. But abdomen, hip and legs should not be disturbed. Both inspiration and expiration are to be carried ordinarily without any strain. Close your mouth perfectly and breath through nostrils. In this asana the back bone is bent like a bow back side. After half a minute, bring down head to the original position, take half a minute rest and repeat the same for three times. Gradually the number and time can be increased.

Vertebra, Spinalchord and pulsatory blood vessels in the spinalchord are pressed to the maximum and get strengthened. Above all the muscles around neck, pelvic girdle and the nerves in these regions are strengthened. Lungs and heart of the chest cavity, stomach, intestine colons, liver, pancreas, spleen, bile like the digestive organs and kidneys in the abdominal region are pressed well and activated. Due to this, despepsya, constipation, jaundice, Malaria, Typhoid, dropsy etc., diseases will never attack to the person who practice it.

குற்றாலச் சுற்றுலா—தொடர்ச்சி

இயந்திரப் படகு ஒன்று அனைவரையும் ஏற்றிச் சென்று கன்யாகுமரி கடலின் நடுவில் இயற்கையாக அமைந்துள்ள பாறைமீது கட்டப்பட்டிருக்கும், விவேகானந்தர் நினைவுச் சின்ன மாளிகையில் இறக்கிவிட்டது. அழகுற அமைந்துள்ள மாளிகையினுள் புகுந்ததும் பளிங்கு மண்டபத்தில் வீரத் துறவியார் கம்பீரமாக நின்ற காட்சி அனைவரையும் பிரமிக்கச் செய்தது. ஆங்கமர்ந்து சில நிமிடங்கள் தியானத்திலாழ்ந்தனர், பின்னர் தியானத்திற்கென்றே அமைக்கப்பட்டிருந்த மண்டபத்துள் புகுந்ததும் ஓங்கார ஒளிவிளக்கு இளம் நீல வண்ணத்தில் ஒளிவிட்டு பிரகாசித்துக்கொண்டிருந்தது. "தெய்வமறை முடிவான பிரணவ சொரூபியை நினைந்து சற்று நேரம் தியானத்தில் அமர்ந்தனர். மக்கள் வருகை தொடர்ந்து இருந்ததால் நீண்ட நேரம் அமர்ந்து தியானத்திலிருக்க அனுமதி இல்லை. எனவே வெளிச் சுற்றுப்புறத்தில் அனைவரும் அமர்ந்து பிரார்த்தனை நிகழ்த்தினர். வீரத் துறவியாரை உலகுக்கு ஒளிவிளக்காகப் பெற்றுத்தந்த இராமகிருஷ்ண பரமஹம்சப் பெருமானை நினைந்தவண்ணம் மீண்டும் படகு ஏறி கடற்கரை யடைந்து சுசீந்திரம் நோக்கிப் புறப்பட்டனர்.

நண்பகல் 11-30க்குச் சுசீந்தரம் சேர்ந்து திருக்கோவிலினுள் புகுந்து இறைவனைச் சேவித்தனர். சுசீந்திரத் தலபுராண வரலாறு மிக இனிமையானது. அதை நினைந்தவண்ணம் உட்பிரகாரம் சுற்றி வருகையில் அனுமனின் விஸ்வருப தரிசனம் கிடைத்தது. ஒவ்வொரு விநாடியும் உள்ளத்தில் விஸ்வருபமெடுக்கும் மனமெனும் அனுமனை அப் பேருரு நினைவுபடுத்தியது, அனைத்துக் காட்சிகளும் அறிவுக்கு விருந்தாகவே இருந்தன. சுசீந்திர தரிசனத்திற்குப் பிறகு அடுத்துக் காணவேண்டியது மணிமுத்தாறு அணை. வண்டியும் புறப்பட்டது.

பிரயாணத்தின்போது ஊர்தியில் ஒரு சிறப்பு நிகழ்ச்சி! பயணம் செய்யும் சிறியவர் பெரியவர் படித்தவர் படிக்காதவர் யாவராயினும் ஒவ்வொரு தாயுமானவர் பாடல் பாடவேண்டும்; இப்படி ஒரு அன்புக் கட்டளை. என்ன வியப்பு! வண்டியை ஓட்டிச் சென்றவர்முதல் அனைவருமே ஒவ்வொருவராகப் பாடினர். ஊர்தியில் ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்ததால் எல்லோருடைய பாடல்களும் அனைவருக்கும் செவிக்குணவாக அமைந்தது. பாடியதுமட்டுமன்று; ஒவ்வொருவரும் பாடியபின் தம்முடைய பெயரையும் அடுத்துப் பாட இருப்பவரின் பெயரையும் அறிவித்து அவரிடம் மைக்கைக் கொடுத்தனர். ஒலி பெருக்கியில் பாடுவதனால் அனைவருக்குமே அளவற்ற மகிழ்ச்சி! அவ் வப்போது நிகழ்ச்சிகளை அறிவித்து அனைவருக்கும் ஊக்கமளித்து வந்தவர் சுற்றுலா குழு அமைப்பாளருள் ஒருவரான திருவாளர் S. K. மலைக்கனி அவர்கள். எல்லோரையும்விட இவருக்கே மட்டற்ற மகிழ்ச்சி! மகிழ்ச்சிமீதூர்ந்த காரணத்தால் உடனே தாம் வைத்திருந்த ராஜாஜி எழுதிய "கண்ணன் காட்டிய வழி" என்ற நூலை திருவாளர் ஆதி நாராயணன் அவர்களின் அன்புக் கரங்களில் கொடுத்து எல்லோரையும் பாடவைத்த புலவர் பா. ஆழ்வார் அவர்களுக்கு அன்புப் பரிசாக அளிக்கிறேன் என அறிவித்தார். ஆழ்வார் அவர்கள் தாம் எதிர் பாராமல் நடைபெறும் இந்நிகழ்ச்சியும் அவனன்றி ஓரணுவும் அசையாது எனப் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சி முடியவும் மணிமுத்தாறு அணை நெருங்கவும் சரியாக இருந்தது. மலைமீது சென்ற ஊர்தி குறிப்பிட்ட எல்லைக்குமேல் போக காட்டிலாகா அனுமதிக்கவில்லை. எனவே நீரின்றி வறுமையடைந்த வீடுபோல காட்சிதந்த இடத்தைப் பார்த்துவிட்டு, அரசினரால் அமைக்கப்பட்டிருந்த பூங்காவைச் சுற்றிப் பார்த்துக்கொண்டே வண்டி சேரன்மாதேவி நோக்கித் திரும்பியது. நீரை முகந்து சென்ற மேகக் கூட்டங்கள் மலைகளின் உச்சிமோந்து முத்தமிட்டுச் சென்ற காட்சி கண்களுக்கு விருந்தாக அமைந்தது. பகல் 1-25 மணிக்கு சேரன்மாதேவியில் மதிய உணவை முடித்துப் புறப்பட்ட வண்டி மாலை 4 மணிக்குப் பாபநாசம் சென்றடைந்தது

கோவிலின் கதவு தாளிடப்பட்டிருந்ததால் வாயில் அருகில் அமர்ந்து பிரார்த்தனைப் பாடி வணங்கினர். தாமிரபரணி ஆற்றுநீர் அழகாக ஓடிக்கொண்டிருந்தது; ஓட்டத்தை ரசித்து நீரை ருசித்தனர். இளநீர் போன்ற சுவை. வேண்டியமட்டும் பருகிப் புறப்பட்டு இரவு 7-25க்கு சங்கரன் கோயில் வந்து சேர்ந்தனர். கோவில் திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. கொடைவள்ளல்களின் பரந்து விரிந்த உள்ளம் போலவே கோவிலின் அமைப்பும் பரந்திருந்தது. கோவில் மட்டுமன்று! கோவிலில் குடிகொண்டுள்ள இறைவன் திருமேனியை அமைத்தவர்களின் உள்ளமும் பரந்த நோக்கோடு இருந்ததையும் காண நேர்ந்தது சைவக் கடவுளான சங்கரரையும் வைணவக் கடவுளான நாராயணரையும் சமரசப்படுத்தி ஒரே திருமேனியில் இருவரையும் சங்கரநாராயணர் என்று அமைத்திருந்தனர். அப் பெருமானையும் சங்கரலிங்கம், கோமதி அம்மையாரையும் வணங்கி பிரார்த்தனைபாடி குற்றாலம் பயணமாயினர்.

இரவு 10-30 மணிக்குக் குற்றாலம் சென்றதும் தங்கும் விடுதியின் வாயிலில், தலைவர் சுவாமி அவர்களும், விருதுநகரினின்றும் சுவாமியவர்களுடன் வருகைதந்த திருமதி மகமாயம்மையார், சுந்தரம்மாள்,

மீராபாய் தியாகராஜன் ஆகியோர் எதிர்கொண்டழைத்தனர், சுற்றுலா அன்பர்கள் குற்றாலத்தில் சுவாமியவர்களை வரவேற்கவேண்டும் என எண்ணமிட்டிருந்தவர்களுக்கு, சுவாமியவர்கள் வரவேற்றதைக் கண்டதும் மனம் தோல்வியால் வாட்டமுற்றது.

மனச் சுமையை இறக்குவதுபோல அனைவரும் தம்முடைய பெட்டி படுக்கைகளை இறக்கினர். வயதாலும் உள்ளத்தால் துடிப்புள்ளவர்களுமான சிலர் இரவு 11 மணியளவில் உடனே குற்றால அருவியில் (Main-falls) குளிக்கப் புறப்பட்டனர். மங்கல நிகழ்ச்சி நடைபெறும் மாளிகையின் நுழைவாயிலில் புகும்போது பன்னீர் தெளித்து வரவேற்பதுபோல, மழைச் சாரல் துளிகள் வரவேற்றன. குற்றாலச் சீசன் என்பார்களே இதுதான் போலும் என்றுணர்ந்து அருவி நோக்கிச் சென்றனர். போகும் வழியிலேயே குற்றாலத் துறைபெருமான் கோவில்கொண்டிருந்ததால் வணங்கி அருவியை நோக்கினர். மகிழ்ச்சி ஒருபுறம்; மருட்சி ஒருபுறம், வானத்தினின்றும் நேரே பாய்ந்து வருவதுபோல அருவியின் காட்சியைக் கண்டு ஒருகணம் மறந்து நின்றனர். அச்சத்தினால் அன்பர்கள் அருவியின் ஓரமாக நின்றனர். நீர்த் திவலைகள் மட்டுமே பட்டன. திருவாளர் ஆதிநாராயணன் அவர்கள் பலமுறை பழக்கப்பட்டவர் ஆதலால் தைரியமாக ஒவ்வொருவராகப் பிடித்து இழுத்துச்சென்று அருவி வேகமாக விழும் நடு இடத்தில் நிற்கவைத்து அச்சந் தெளியவைத்தார். அப்புறம் கேட்க வேண்டுமா? ஒவ்வொருவரும் முந்திச் சென்று திருவாளர் ஆதிநாராயணன் அவர்களுக்கே கற்றுக் கொடுப்பர்போலிருந்தது. ஆடவர்தாம் என்றால் மகளிர்க்கு எவ்வளவு துணிவு? அவர்களில் சிலரும் அந் நள்ளிரவில் அருவி ஆடினர். அன்றைய நிகழ்ச்சி நீராடலுடன் முடிந்தது.

9—8—78 காலை அனைவரும் (Main Falls) நீராடிக் களித்தனர். 8 மணி அளவில் பழைய குற்றாலத்திலும் 10 மணியளவில் புலியருவியிலும் குளித்தனர். புலியருவி காண்பதற்கு சிறிய அளவே உயரம் இருந்தது. நீர் வீழும் வேகமோ சொல்லுந் தரமன்று! அருவியை விட்டு வெளிவர மனமின்றி மகிழ்ச்சியுடன நீராடினர். சுற்றுலா குழு அமைப்பாளர் சிரமப்பட்டு அனைவரையும் ஒருவாறு அழைத்துக கொண்டு திருமலை முருகன் கோவில் நோக்கிப் புறப்பட்டனர், 626 படிகள் கொண்ட மலை. யோ. ஆலய அன்பர்கள் வருகிறார்களே என்று ஆதவன் கருணை கூர்ந்தான்: குளிர்ந்த காற்று; மழைத் தூரல் தெளித்தது. உச்சிக்குச் சென்று முருகனை தரிசித்தனர். மழை சற்று பலமாக பொழியவே சில நிமிட நேரங்களைப் பயனபடுத்தி யாரையாவது உரை நிகழ்த்துமாறு தலைவர் சுவாமியவர்கள் பணித்தனர். திருவாளர் S. K. மலைக்கனி அவர்கள் புலவர் திரு. பா. ஆழ்வார் பெயரை முன் மொழிந்தார். "எந்த காலத்திலும் எந்த சூழ்நிலையிலும் நாம் எங்கிருப்பினும் அவரவர் செய்யும் சாதனையே ஆதாரமாகப் பற்ற வேண்டும் என்ற பொருள்பட உரை நிகழ்த்தினர். மழையும் ஓய்ந்தது.

செல்வி R. சாந்தி B. Sc., நாமாவளி பாடத் தொடர்ந்து அனைவரும் பாடியவண்ணம் மலையடிவாரம் சேர்ந்தனர். மாலை 4 மணிக்குப் புறப்பட்ட ஊர்தி 5 மணிக்கு இலஞ்சி முருகன் கோவிலை யடைந்தது. முருகனின் அழகைக் கண்டு களித்துப் பிரார்த்தனைப் பாடி புறப்பட்டு 5-30 மணிக்கு ஐந்தருவி சேர்ந்தனர். 'நமசிவாய' எனும் ஐந்தெழுத்து போன்று ஐந்து பிரிவுகளாக அருவிகளில் நீர் பெருக்கெடுத்து விழ்ந்தது. ஒரு பிரிவில் மகளிர் மட்டும் குளிக்க ஒதுக்கப்பட்டிருந்தது.

ஏனைய நான்கு பிரிவுகளில் ஆடவர் நீராடினர். 'உடல் குளிர உள்ளமும் குளிர நீராடல் முடிந்தபின் குற்றாலம் திரும்பி குற்றாலத்துறை பெருமானைக் கண்டு வணங்கினர். அன்று இரவு கழிந்தது.

விடிந்ததும் 10—8—78 குற்றாலத்தில் குளிப்பது தனி அலாதி அல்லவா? அன்றும் நீராடல் காலை 8 மணிக்கு. விடுதியில் பிரார்த்தனைக் கூட்டம். சுவாமியவர்களின் அன்புக் கட்டளை, திருமதி காளீஸ்வரி வைரவன் அவர்களின் செல்வ மகள் இந்திரா பாடவேண்டுமென்பதாகும். திருப்புகழ் பாடல்களை அழகாகப் பாடினார் இந்திரா தேவி. மௌனப் பிரார்த்தனைக்குப் பின் சிற்றுண்டி முடித்து மதிய உணவுப் பொட்டலங்களைப் பத்திரப்படுத்திக்கொண்டு மற்றுமுள்ள அருவிகளைக் காணப் புறப்பட்டனர். மெயின் அருவியை விடுத்து சற்று தூரத்தில் சிற்றருவி! இயற்கையைச் செயற்கைப்படுத்தபட்ட அருவி அது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி யறை. கட்டணம் நபருக்கு 30 காசு! அதைக் கண்டு மலையேறி செண்பகதேவி அருவி நோக்கிப் புறப்பட்டனர். 9-45க்கு செண்பகதேவி அருவி காட்சி தந்தது. இயற்கை எழில் சூழ்ந்த அவ்வருவியை நெருங்கியதும் அன்பர்கள தன்வசம் இழந்தனர். ஆதிகாலத்தில் இறைவன் தட்சிணாமூர்த்தி கோலமாக கல்லால மரத்தின் கீழ் சனகன் முதலான நால்வர்கட்குச் சொல்லாத சொல்லை உணர்த்திய இடமோ? என நினைந்தனர். குடை விரித்தாற்போல கல்லால மரம் வளர்ந்து நிழல் தந்தது. அதனடியில் இயற்கையாகவே ஒருவர் அமர்ந்து நிட்டைபுரியுமளவில் இருக்கை இருந்தது. அவ்விடத்தில் சுவாமிகள் முன்னிலையில் அனைவரும் அமர்ந்தனர். தாயுமானவர் பாடலான கல்லாலின் என்ற தலைப்பின் முதற் பாடலை சுவாமிகள் பாட, தொடர்ந்து ஒவ்வொருவரும் ஒரு பாடல பாடினர். சுற்றிலும் பாறைகள் அன்பர்கள் அமர்ந்து நிட்டை புரிய இருக்கை யளித்தது. மெய்ம்மறந்த நிலையில் அமர்ந்து நிட்டை கூடினர். சுவாமியவர்கள் அன்பர்களின் பக்குவத்திற்கேற்ப வேட்கையுள்ளவர்களுக்கு உபதேசம் அளித்தனர். சுற்றுலாவிலேயே பெறுதற்கரிய பேறுபெற்ற இடம் செண்பகதேவி அருவியே யாகும்.

பகல் 12 மணிவரை அன்பர்கள் தம்மை மறந்து தியானத்திலாழ்ந்தனர். அனைவரும் மார்க்கண்டேயரைப்போல ஒரே பற்றாக பற்றிவிடுவரோ என அஞ்சினார்போலும் இறைவன்! வருண பகவானை ஏவி எழுப்ப முயன்றார். ஊஹூம்! அப்போதும் எழுந்தார்களில்லை! பின்னர் சுவாமியவர்களின் அன்புக் கட்டளையால் "மூர்த்தியெல்லாம் வாழி" என்ற பாடல் ஒலித்த பினபு தியானம் கலைந்து எழுந்தனர். அப்படியும் சிலரை வலிந்து எழுப்ப வேண்டியதாயிற்று. சுவாமியவர்களின் அடிச் சுவட்டை பினபற்றி மலை ஏறி செணபகதேவி அம்மன் கோவிலை அடைந்தனர். அனைவரும் மதிய உணவுண்டு சில நிமிடங்கள் ஓய்வெடுத்தனர். ஆங்கு வானரங்கள் மிகுதியாக விளையாடின. தாயின் வயிற்றை இறுகப் பற்றிக்கொண்டிருந்த குட்டிகளுடன குரங்குகள் அங்குமிங்கும் தாவிக்கொண்டிருந்த காட்சி விநோதமாகவும், வேடிக்கையாகவும், வேதாந்த விளக்கந் தருவதாகவும் இருந்தது.

குற்றால அருவி உற்பத்தியாகும் முதன்மையான இடமான மலையுச்சி, அதாவது தேனருவி காணப் புறப்பட்டனர். வயது முதிர்ந்தவர்கள், நடக்க இயலாதவர்கள் பலர் அம்மன் கோவிலிலேயே தங்கிவிட்டனர். ஏனையோர் சுவாமிகள் முனனே வழிகாட்டிச் செல்லப் பின தொடர்ந்தனர். கரடு முரடான பாதைதான், அடர்ந்த காடு,

காளத்தி மலை உச்சி செல்லும்போது கண்ணப்ப நாயனருக்கு ஏற்பட்ட இனம் புரியாத உணர்ச்சி அன்பர்களுக்கும் ஏற்பட்டது. குற்றாலம் அடிவாரத்திலிருந்து தேனருவி பாயும் இடம் சுமார் ஐந்து கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். எட்டிவிட்டனர் தேனருவியை!

இயற்கையின் முழு நிறைவைக் கண்டனர். சில்லென்ற காற்று; காற்றின் மணமே தனி அலாதி! மேக மண்டலங்கள் திரண்டு ஆதவனின் வெப்பத்தை விழுங்கியிருந்தன. மேற்குத் தொடர்ச்சிமலை ஒன்றையொன்று சந்திப்பதுபோல இருந்தன, இரண்டுக்குமிடையில் சிறிதளவே இடைவெளி. இருமருங்கிலும் புரண்டுவரும் நீர் வெள்ளம் அந்த இடைவெளியில் வீழ்கின்றன. அவ்விடத்தில் தேனீக்கள் மிகுதியாக கூடுகட்டி வாழ்கின்றமையால் "தேனருவி" எனப் பெயர் பெற்றதாக விளக்கம் கிடைத்தது.

அருவியினின்றும் விழும் நீர் வேகமாக ஓடும் நீரோட்டத்தின் மேல் பாலம் ஒன்று கட்டப்பட்டிருந்தது. மிகப் பழைமையான பாலம் அதன்மீது அன்பர்கள் வரிசையாக அமர்ந்து அருவியின் ஓசையை விழுங்குமளவு உரத்த குரலில் பிரார்த்தனை பாடினர். ஆனல் அருவியின் ஓசைதான் பிரார்த்தனை ஓசையை விழுங்கியது. பிரார்த்தனை முடிந்ததும் சற்று நேரம் அவ்வோசையில் லயமாகி மவுனப் பிரார்த்தனையில் இருந்தனர். "காலமொடு" பாடலுக்குப்பின் புறப்பட்டனர். புறப்படுவதற்கு மனம் இடந்தரவில்லை யெனினும், காட்டுப்பகுதியாயிற்றே! நேரம் மாலை 4 மணி ஆகிவிட்டது. 5 கிலோ மீட்டர் நடைநடந்து மலையடிவாரம் இறங்கவேண்டுமே! எனவே சுவாமிகளைத் தொடர்ந்து புறப்பட்டனர்.

வழியில் செண்பகதேவி அம்மன் கோவிலில் தங்கியிருந்தவர்களையும் உடன் அழைத்துக்கொண்டு கண்கொள்ளா இயற்கைக் காட்சிகளைக் கண்டு ரசித்தவண்ணம் இறங்கினர். அன்பர்களோடு மழையும மேகத்தினின்று கீழிறங்கியமையால் ஓரிடத்தில் தங்கினர். அவ்விடத்தில் தென்னை மரங்கள் ஓங்கி வளர்நதிருந்ததைக்கண்ட சுவாமியவர்கள் தெங்கின் வளம்பறறி சிற்றுரை நிகழ்த்தினர். ஆன்மீகவியல் உலகியல் நீதிக் கருத்துக்களை தெங்கின் உவமையால் எடுத்து விளக்கினர்.

தாளுண்ட நீரைத் தலையால் தந்து நன்றிக்கடன் செலுத்தும் தெங்கின் பெருமையைக் கேட்ட மாரி, தானும் நன்றி செலுத்துவது போல நின்று அன்பர்களைப் போகவிட்டது. சிலர் சித்திரசபை காணச் சென்றனர்; மற்றையோர் விடுதி சென்று ஓய்வெடுத்தனர். இரவு 6-30 முதல் 8 மணி வரை பஜனை நடைபெறறது. திருவாளர் S. K. மலைக்கனி அவர்கள் சுற்றுலாவை வெற்றிகரமாக முடித்துத்தந்த அனைவர்க்கும நன்றி கூறினர். இரவு உணவுக்குப் பிறகு சிலா படுக்கைக்குச் சென்றனர். சிலர் தியானத்திலாழ்ந்தனர், சுவாமிகள் இரவு 12-30 மணி வரை சில முக்கிய அன்பர்களுடன் எதிர்காலத்தில் யோகாசன ஆலயம் மக்களுக்குச் செய்யவேண்டிய சேவைகளைப் பற்றிய திட்டங்களை எடுத்து மொழிந்தனர். பின்னர் அவரவர் இறைவனுக்கு வணக்கஞ் செலுத்தி படுக்கைக்குச் சென்றனர்.

விடிந்ததும் வெள்ளிக்கிழமை ஆகஸ்ட் 11-ம் நாள். குற்றலத்தை விட்டுப் புறப்படவேண்டிய நாள். விடியற்காலை குற்றால அருவியில் குளிர் நீராடப் புறப்பட்டனர். எஞ்சிய ஆசை நிறைவேறிய பின்னர்

குற்றாலத்துறைப் பெருமான் தரிசனம் முடித்து, சித்திரசபை நோக்கி விரைந்தனர், இறைவனின் திருவிளையாடல்கள் சித்திர ரூபமாக வரையப்பட்டிருந்தன. கண்ணுற்றுப் பிரார்த்தனை தியானத்தில் கலந்துகொண்டனர். சில அன்பர்கள் சுவாமிகளிடம் பெறுதற்கரிய அரும் பொருளைப்பெற்று களிப்படைந்தனர். விடுதி திரும்பிய அனைவரும் சிற்றுண்டி முடித்து பஜனையில் கலந்துகொண்டனர், பின்னர் சுவாமி அவர்கள் அருளுரை நிகழ்த்தினார்கள்; இந்த சுற்றுலாவில் கலந்துகொண்ட அன்பர்கள் திடமான ஒரே கொள்கையையுடைய நெஞ்சத்தைப் பெற்றோம், வாழ்க்கையில் தேடவேண்டிய அரும் பொருளைப் பெற்ற நீங்கள் அதனை விழலுக்கு இரைத்த நீராக்காமல் முழுப்பயனையும் அடைய வேண்டும் என்றார்கள்,

அன்பர்கள் விரும்பிய வண்ணம் சென்னை புரசைக் கிளை செயலாளர் திரு. M. லோகநாதன் சுவாமியவர்களுடன் புகைப்படம் பிடித்தனர். மதிய உணவு முடித்து அவரவர் புறப்பட ஆயத்தமாயினர். சுற்றுலா குழு அன்பர்களை ஏற்றிச்சென்ற ஊர்தி செங்கோட்டை ரயில் நிலையத்தில் சேர்த்தது. பிற்பகல் 3-15 மணிக்குப் புறப்பட்ட ரயில் மாலை 5 மணி யளவில் விருதுநகர் சேர்ந்தது. விருதுநகர் அன்பர்கள் பலர் ரயில் நிலையத்தில் காத்திருந்தனர். சுவாமியவர்கள் அனைவருக்கும் அன்பு வார்த்தைகள் கூறினர், வண்டி புறப்பட்டதும் அன்பர்களின் கண்கள் குளமாயின! அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? அதைத் தாங்கும் வன்மையில்லாத ரயில் பெட்டி விரைவில் புறப்பட்டு விட்டது.

நெஞ்சத்தை இறைவன் நாமாவளியில் திருப்பிவிட்டனர் இசைப் பிரிவு அன்பர்கள். இரவு மணி 9 வரை பாடல்தான்! செவிக்குணவில்லாத போழ்து சற்றே வயிற்றுக்கும் உணவு வேண்டுமல்லவா? அதுவும் முடிந்தது. அவரவர் தந்தம் வழிபாட்டில் அமர்ந்திருந்து படுக்கைக்குச் சென்றனர். இரவு வெகு வேகமாகக் கழிந்தது, 12ந் தேதி சனிக்கிழமை காலை 6 மணி அளவில் செங்கல்பட்டு ரெயில் நிலையத்தில் பொதுச் செயலர் திரு. C. இராமசுவாமி அவர்கள் வரவேற்று உடன் கலந்து கொண்டனர். காலை 6-15 மணியளவில் சென்னை மாம்பலம் ரயில் நிலையத்தில் தென்சென்னை செயலர் திரு. T. S. கலியாண சுந்தரம் அவர்கள் வரவேற்று உடன் கலந்து கொண்டனர் சுற்றுலாவைப்பற்றி இருவரும் ஆவலோடு கேட்டு ரசித்தன. 7 மணிக்கு எழும்பூர் நிலையத்தில் அனைவரும் இறங்கினர். அன்பர்களின் உறவினர் பலரும் வருகை தந்து அவரவரை அன்போடு அழைத்துச் சென்றனர். அன்பு நெஞ்சங்கள் விடைபெற்றுப் புறப்பட்டன. வாழ்நாளில் நெஞ்சத்தைவிட்டு அகலாத இச் சுற்றுலா பெறுதற்கரிய பேறு என எல்லோரும் நிறை உளத்தோடு கூறினர்.

நன்றி!

சென்னையினின்றும் 5—8—78 அன்று புறப்பட்ட சுற்றுலா குழுவினரை செங்கற்பட்டு யோ. ஆ. அன்பர்கள் செங்கை ரயில் நிலையத்தில வரவேற்று அன்புடன் இனிப்பு வழங்கி வழியனுப்பி வைத்தனர். 6—8—78 காலை மதுரை ரயில் நிலையத்தில் விருதுநகர் அன்பர் திரு. சங்கரலிங்க நாடார் அவர்கள் அன்போடு வரவேற்று அன்று முழுவதும் உடனிருந்து ஆவன செய்தனர் திருவாளர்கள் K. முத்துகிருஷ்ண செட்டியார், கஸ்தூரி ஆதிநாராயணன், மீராபாய் தியாகராஜன்

இராஜம்மாள் நரசிம்மலு, காஞ்சனு கண்ணப்பன், P. K. ஞானம் காசி ராஜன், சங்கமுத்து அம்மையார் மற்றும் சில அன்பர்கள் இடையிடையே பிரயாணத்தின்போது இனிப்பும், தின்பண்டங்களும் வழங்கி மகிழ்வித்தார்கள். திருமதி சுந்தரம்மாள் சங்கரலிங்க நாடார் அவர்கள் சுவாமிகளுக்காக விசேஷ கவனம் செலுத்தி தேவையை நிறைவு செய்து வைத்தனர். 6—8—78 அன்று விருதுநகரில் சுவாமிகளின் 'சிவக்கூத்து' சிறப்புக்கூட்ட அழைப்பிதழ் நன்கொடையினை மகிழ்ச்சி அச்சகத்தினர் வழங்கினர். அன்பர்கள் விருந்தோம்பலுக்கு இலை நன்கொடை வழங்கியவர் திரு. R ராமச்சந்திரன். இவ்வன்பர்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றி உரித்தாகுக! அன்பர் பணியில் மேன்மேலும் ஈடுபட்டு இன்பநிலை எய்த எல்லாம்வல்ல பரம்பொருள் திருவருள் புரிவதாகுக! —ஆசிரியர்.

ஆத்ம யோகம்—22

சென்னை சிந்தாதிரிப்பேட்டை, புது பங்களா தெரு, இந்து அலுவலக தொழிலாளர் சங்க கட்டிடத்தில் 15—8—78 காலை 10 மணிக்கு ஆத்ம யோக நிகழ்ச்சி பிரார்த்தனையுடன் தொடங்கியது. வேத வேள்விக்குப் பிறகு யோகாசனப் பயிற்சி செய்து காண்பிக்கப் பட்டது. திரு. V. A. கெங்குராஜ் யோகாசனங்களின் நன்மைகளை விளக்கினர். மகளிர் இசைக் குழுவினரின் அருளிசை நிகழ்ச்சிக்குப் பிறகு மௌனம் கடை பிடிக்கப்பட்டு முற்பகல் நிகழ்ச்சி முடிவுற்றது. இடை வேளை முடிந்ததும், பஜனை, தியானத்திற்குப் பிறகு யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் 'சிவ தாண்டவம்' எனும் பொருளில் வேதாந்த விரிவுரை நிகழ்த்தினர்கள். திருவாளர் K. காமாட்சிநாதன் நன்றியுரை கூற பிரார்த்தனையுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது. கிளைச் செயலர் திரு. G. துளசிங்கம் அனைவரையும் வரவேற்றனர். அன்பர்களுக்குச் சிற்றுண்டி வழங்க திருவாளர் K. காமாட்சிநாதன் அவர்கள் ரூ. 110ம், திருவாளர் T. முனுசாமி நாடார் அவர்கள் ரூ. 100ம் நன்கொடை வழங்கினர்.

ஆவணி அவிட்டத் திருநாள்

18—8—78 காலை 9 மணிக்கு சென்னை வண்ணையம்பதி திருவொற்றியூர் நெடுஞ்சாலையிலுள்ள நல்லதம்பி சேதுராமன் திருமண மண்டபத்தில் யோகாசன ஆலய நிறுவனர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் தலைமையில் விழா தொடங்கியது. பிரார்த்தனைக்குப் பின்னர் வேதவேள்வி வளர்க்கப்பட்டது. அனைவரும் காயத்ரீ மந்திரம் ஓதி பூணூல் அணிந்துகொண்டனர். சுவாமி அவர்கள் இந்துக்கள் பூணூல் அணிவதன் உண்மை விளக்கத்தை சரித்திரச் சான்றுகள் பல காட்டி பேருரை நிகழ்த்தினர்கள். மகளிர் இசைப் பிரிவினரின் அருளிசைக்குப் பின்னர் அனைவருக்கும் விருந்தோம்பல் நிகழ்ந்தது. திருவாளர் T. S. கல்யாணசுந்தரம் வரவேற்புரையும், திருவாளர் பி. வெங்கடேசன் நன்றியும் நவின்றனர். வண்ணையம்பதியிலுள்ள Dr. வரதப்ப நாயுடு ஹோமிலுள்ள சுமார் 325 பிள்ளைகளுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

திருமணம்



யோகாசன ஆலய விஜயம் செயற்குழு உறுப்பினர் திரு. K. G. மணி அவர்களின் மைத்துனியும், யோகாசன ஆலய மகளிர் பிரிவு உறுப்பினர் திருமதி புஷ்பா மணி அவர்களின் தங்கையுமான திருவளர்செல்வி சுமித்ராவுக்கும், திருவளர்செல்வன் R. விஸ்வ நாதனுக்கும், (17—8—78) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சென்னை, சூளை. அவதானம் பாப்பையர் தெரு ஓம் கங்கை விநாயகர் திருமண மண்டபத்தில் மிகச் சீரியமுறையில் திருமணம் நடைபெற்றது.

யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் மணவிழாவுக்குத் தலைமை வகித்து மணமக்களை வாழ்த்தியருளினர். செய்தி சுற்றுலா அறநிலைய துணை அமைச்சர் மாண்புமிகு ஐசரிவேலன் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் திரு. தி. சு. நல்லதம்பி அவர்களும், திருவொற்றியூர் நகர தி. மு. க. தலைவர் திரு. த லோகநாதன் அவர்களும் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தனர். யோகாசன ஆலய மகளிர் பிரிவு சார்பாக திருமதி கௌரி அவர்கள் வாழ்த்து மடல் வாசித்தளித்தனர். ஆடவர் பிரிவின் சார்பில் பிரார்த்தனைப் படம் அன்பளிப்பாக அளிக்கப்பட்டது. உறவினர் நண்பர்கள் வருகைதந்து மணமக்களை வாழ்த்தியும் அன்பளிப்புகள் அளித்தும் சிறப்பித்தனர்,

'யோகாசன ஆலய விஜயம்' ஆசிரியர் புலவர் திரு. பா. ஆழ்வார் அவர்கள் அனைவரையும் வரவேற்று, மணமக்களுக்கு ஓராண்டு விஜயம் (மாதப் பத்திரிகை) சந்தா செலுத்தி அன்புப் பரிசாக வழங்கினர், திருவாளர் K. G. மணி அவர்கள் மண விழாவுக்கு வருகைதந்து சிறப்பித்தவர்க்கும், வாழ்த்துச் செய்தி அனுப்பியோர்க்கும் நன்றி தெரிவித்துக்கொண்டனர். இம் மாத இதழ் மணமக்களின் திருமண நினைவாக வெளியிடப்பட்டது.

K. G. மணி
யோகாசன ஆலய விஜய செயற்குழு உறுப்பினர்.

சிறப்பு நிகழ்ச்சி

தென்னக இரயில் பெட்டித் தொழிலாளர்கள் பழநி ஆண்டவர் சத்சங்க 8வது ஆண்டு விழா 27—8—78 அன்று சென்னையை அடுத்துள்ள ஞாயிறு எனும் ஊரில் புஷ்பரதீஸ்வரர் கோவிலில் நடைபெற்றது. அவ்வமயம் யோகாசன ஆலய கிளைகள் மேற்பார்வையாளர் திரு. V. நரசிம்மலு அவர்கள் தலைமையில், 'யோகாசன ஆலய விஜயம்' ஆசிரியர் புலவர் திரு. பா. ஆழ்வார் அவர்கள் "அருணகிரி கண்ட ஆறுமுகன்" என்ற பொருளில் இசைச் சொற்பொழிவாற்றினார்கள். சங்க அமைப்பாளர் திரு. பழநி அவர்கள் நன்றி கூறினார்கள்.

6—9—78 அன்று இரவு 8 மணிக்கு, விநாயக சதுர்த்தியை முன்னிட்டு சென்னை வண்ணையம்பதி நாராயணப்ப நாய்க்கன் தோட்டம் 7வது சந்து அருள்மிகு முச்சந்தி விநாயகர் கோவிலின் 6ஆம் ஆண்டு விழா நடைபெற்றது. திருவாளர் V. சுப்பிரமணியம் தலைமை வகித்தனர். திருவாளர்கள் D. ராஜவேல், ராமைய்யா, T. D. அரசு ஆகியோர் முன்னிலையில் "யோகாசன ஆலய விஜயம்" ஆசிரியர் புலவர் திரு பா. ஆழ்வார் அவர்கள் "எங்கே விநாயகர்" என்ற பொருளில் இசைச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். திருவாளர் C. சுந்தரேசன் அவர்கள் நிகழ்ச்சி அமைத்துக் கொடுத்தனர். யோகாசன ஆலய விஜய வளர்ச்சிக்கு ரு 51/- நன்கொடை வழங்கினர்.

பெரிய புராண சிறப்புக் கூட்டம்

சென்னை இராயபுரம் மன்னார்சாமி கோவில் தெருவிலுள்ள மன்னார்சாமி கோவிலில் கடந்த ஆறு திங்களாக பெரிய புராண விரிவுரை புலவர் திரு. பா. ஆழ்வார் அவர்களால் நிகழ்த்தப்பெற்று வருகின்றது அதை முன்னிட்டு 3—9—78 அன்று சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. யோ. ஆ. அமைப்பாளர் திரு. பி. வெங்கடேசன் அவர்கள் தலைமை வகித்தனர், அறநிலைய துணை அமைச்சர் மாண்பு மிகு ஐசரி வேலன் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் திருவாளர் திருப்பூர் மணிமாறன் அவர்களும் சிறப்புரையாற்றிச் சிறப்பித்தனர். புலவர் திரு பா, ஆழ்வார் அவர்கள் திருநாளைப்போவார் (நந்தனார்) வரலாற்றுத் தொடக்கவுரை நிகழ்த்தினார்கள். மகளிர் இசைக் குழுவினர் அருளிசை வழங்கினார்கள். திருவாளர் S. K. மலைக்கனி வரவேற்றனர். பொதுச் செயலர் திரு C. இராமசுவாமி நன்றி நவின்றனர். பிரார்த்தனையுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

"யோகாசன ஆலய விஜயம்"
மாத இதழின் சிறப்பு விழா அழைப்பு !

2—10—78 மாலை 6-30 மணிக்கு சென்னை வண்ணையம்பதி திருவொற்றியூர் நெடுஞ்சாலை எண் 194, நல்லதம்பி சேதுராமன் திருமண மண்டபத்தில் உயர்திரு பி. சி. கணேசன் B.Sc., B.T., (முதலமைச்சரின் பத்திரிகைத் தொடர்பு அலுவலர்) அவர்கள் தலைமையில் நிகழும். "திருக்கோயில்" ஆசிரியர் திரு நா. ரா. முருகவேள் M.A.M.O.L., செல்வி R. சாந்தி B.Sc., யோ. ஆ. விஜயம் ஆசிரியர் புலவர் திரு. பா. ஆழ்வார் ஆகியோர் சிறப்புரை ஆற்றுவார்கள். மாலை 5 முதல் 6-30 மணிவரை யோ. ஆ. இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறும். அனைவரும் கலந்து இன்புற வேண்டுகிறோம்.

Regd. No. M. 5264 Yogasana Alaya Vijayam

அறிவிப்பு!

யோகாசன ஆலய விஜயத்தின் நிர்வாகம் 25—7—78 முதல் பின்வருமாறு மாற்றமடைந் துள்ளது.

வெளியிடுபவர்

திரு. அருண்குமார் N. பட்டேல்
462, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
(T. H. ROAD)
பழைய வண்ணை, சென்னை-600 021

ஆசிரியர்

புலவர் திரு. பா. ஆழ்வார்
464, T. H. ரோடு
பழைய வண்ணை, சென்னை.600 021

மேலாளர்

திரு, S. கண்ணப்பன்

யோகாசன ஆலய விஜயம் சம்பந்தப்பட்ட கடிதங்கள், சந்தா தொகை மணியார்டர் செலுத்து வோர் ''வெளியிடுபவர்'' முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

C. இராமசுவாமி,
பொதுச் செயலர்.

Published by Sri Arun Kumar N. Patel, 462, T. H. Road, Old Washermenpet, Madras-600021. Editor Pulavar Sri B. Alwar, 464, T. H. Road, Old Washermenpet, Madras-600021. Printed by Sri C. M. Sivaraman, at T. G. Sambandam & Co., Counian Press, 169, (41) Broadway, Madras-600 001. (September-1978)